**MC.No.20/2017**

**<u>Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.07.2026</u>**

**PW –1**

**பெயர் – மலர் (68 ) க/பெ. ராஜாமணி, தாதிகுளம்**

**எதிர்மனுதாரர் ஆஜர்**

**கூடுதல் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. திண்டிவனம் சார்பு நீதிமன்றத்தில் HMOP No.67/2002 என்ற வழக்கினை எதிர்மனுதாரர் என் மீது தாக்கல் செய்து அதன் மூலமாக என்னை அவருடன் சேர்ந்து வாழுமாறு பிராத்தித்துள்ளார் என்றாலும் அது விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ம.சா.ஆ.16 ல் குறிப்பிட்டுள்ள சொத்துக்களானது எதிர்மனுதாரருக்கு அவரது தாயார் வழியில் அவருக்கு உரிமையான சொத்துக்கள் ஆகும். மேற்படி சொத்தில் எதிர்மனுதாரர் தற்போதும் பயிர் செய்து வருகிறார். மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் சம்பந்தமான நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றாலும், மேற்படி சொத்துக்கள் தொடர்பாக வழக்கு நிலுவையில் உள்ளது என்றாலும் அதனை காரணமாக காட்டி நான் எதிர்மனுதாரரை அந்த சொத்துக்களில் பயிர் செய்ய விடவில்லை என்றாலும் எனவே மேற்படி சொத்துக்கள் கரம்பாக உள்ளது என்றாலும் சரியல்ல.

2. ம.சா.ஆ.16 ஆவணத்தை ரத்து செய்யக்கோரி நான் தனி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் உடல் நிலை சரியில்லாமலும் அதன் விளைவாக வேலைக்கு செல்ல இயலாமல் கஷ்ட ஜீவனத்தில் இருந்து வருகிறார் என்றாலும், எனவே எதிர்மனுதாரர் ஜீவனாம்சம் கோரி அவரது மகன் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும், எனவே எதிர்மனுதாரர் எனக்கு ஜீவனாம்சம் தர கடமை உடையவர் அல்ல என்றாலும் அவருக்கு வசதி வாய்ப்புகள் இல்லை என்றாலும் சரியல்ல, அவர் ஜீவனம்சம் தர கடமைப்பட்டவர் ஆவார். அவருக்கு வீடு மற்றும் சொத்துக்கள் உள்ளது.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.